**செ. கு. எண்:086** **நாள்: 17.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை– 17.6.2017

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், பண்மொழி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவரின் மகன் திரு இசக்கிமுத்து என்பவர் 10.4.2017 அன்று மின் கம்பி அறுந்து விழுந்து மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், வைகை அணை அலுவலகத்தில் கம்பியாளராகப் பணிபுரிந்து வந்த, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருத்தப்பாண்டி என்பவரின் மகன் திரு. காட்டுராஜா என்பவர் 29.5.2017 அன்று மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பவானி அலுவலகத்தில் மஸ்தூராகப் பணியாற்றி வந்த, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வெள்ளித்திருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு கருப்பணன் என்பவரின் மகன் திரு சக்திவேல் என்பவர் பணியின் போது, தவறி கிழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், தொரவி கிராமத்தைச் சேர்ந்த திரு சந்தானம் என்பவரின் மனைவி திருமதி கனகாம்பரம் என்பவர் 7.6.2017 அன்று வீட்டிலிருந்து வெளியே சென்ற போது, அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், அனுப்பர்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு சுலைமான் என்பவரின் மகன் செல்வன் சல்மான் மற்றும்

மகள் செல்வி பானுமா ஆகிய இருவரும் **7.6.2017** அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கெங்கசாணிகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு சுரேஷ் என்பவரின் மகன் திரு சுபாஷ் என்பவர் **7.6.2017** அன்று கொடிகம்பத்தை தொட்ட போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கருத்தனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு கருப்பையா என்பவரின் மனைவி திருமதி பஞ்சவர்ணம் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த மேற்கண்ட எட்டு நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**